மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1972 ஆம் ஆண்டு ஆயத் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 42/1972) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

தற்காலிகத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு ஆயத் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 42/1972) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(4) தமிழ் நாடு 1972-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1972).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1972 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சித் (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1972) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் V /1920) விதித் துறைகளின் கீழ் 1969 ஏப்ரலில் நடைபெற்ற தேர்தலில் மதுரை மாநகராட்சி மன்றத்திற் குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிக் காலம் 28—4—1969 நண்பகல் தொடங்கி 3 ஆண்டுகளாகும். 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தினல் மதுரை நகராட்சி 1—5—1971-லிருந்து மாநகராட்சியாக அமைக்கப்பட்ட போது, மதுரை நகராட்சி மன்றத்திற்கு உறுப்பினர்களாகத் தேர்ந் தெடுக்கப்பட்டு, 1—5—1971-ல் உறுப்பினர்களாக இருந்தவர்கள் அவர்கள் நகராட்சி மன்றத்தில் உறுப்பினர்களாக எந்த நாள் வரை பதவி வகித்திருந்திருப்பார்களோ அதுவரையில் மாநகராட்சி மன்ற

@ 249—250-ம் பக்கங்களில் இணைப்பு VII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

உறுப்பினர்களாகப் பதவி வகிக்க அனுமதிக்கப்பட்டனர். 1—5—1971 ஆம் நாளன்று நகராட்சி மன்றத்தில் தலைவராகவும், துணைத் தலைவராகவும் இருந்தவர்கள் இதைப்போலவே அவர்கள் மாநகராட்சி மன்ற உறுப்பினர்களாக இருப்பதற்கு அனுமதிக்கப் பட்ட கால அளவு வரையில் மாநகராட்சி மன்றத்தின் மேயராகவும், துணை மேயராகவும் இருக்க அனுமதிக்கப்பட்டனர். அதன் பின்னர், மதுரை மாநகராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிக் கால அளவு 1—5—1974 வரை நீட்டிக்கப்பட்டுள்ளதை இந்த அவை அறியும். மதுரை மாநகராட்சி மன்ற உறுப்பினர்களின் சட்டப்படிக்கான பதவிக்கால நீட்டிப்புக் காலத்தில் மேயர், துணை மேயர் ஆகியோர் களைத் தேர்ந்தெடுப்பதற்காக ஆண்டுத் தேர்தல்கள் அரசு அறிவிக்கும் நாளில் நடத்தப்படவேண்டும் என்று அரசு கருதியது. எனவே, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தில் புதிய தொரு விதித்துறையை அதாவது 29-ஏ என்ற பிரிவை ஏற்படுத்தியும், 30-வது பிரிவையும் VII -வது விவர அட்டவணையில் 7-வது விதியை யும் திருத்தியும் 23—5—1972-ல் 1972 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 1/1972) சான்றுரைக்கப்பட்டது. இந்திய அரசியலமைப் புச் சட்டத்தின் 213(2) பிரிவில் விதித் துறைகளுக்கு இணங்க 1972 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட வரைவு மேற்படி அவசரச் சட்டத்திற்குப் பதிலாகக் கொண்டு வரப்பட் டுள்ளது.

இச்சட்ட வரைவை சட்டப் பேரவையில் நிறைவேறிய வண்ணம் ஏற்று நிறைவேற்றித் தருமாறு இம்மன்றத்தை நான் கேட்டுக்கொள் கிறேன்.

<u>தற்காலிகத் தலைவர் :</u> முன் மொழியப்பட்ட தீர்மானம் :

" சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1972 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1972) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் ".

<u>திரு. கே. ராஜாராம் :</u> தலைவரவர்களே, ஒரு சிறு விளக்கத்தை மட்டும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இந்தத் திருத்தத்தின் மூலம் 1974 வரை மாநகராட்சி உறுப்பினர்களின் காலம் நீடிக்கப் பட்டிருப்பதால், மேயர் தேர்தல் அதுவரை அடுத்த இரண்டு வருஷத் திற்குப் பிறகுதான் நடைபெறுமா அல்லது சென்னையில் வருஷா

வருஷம் நடக்கிறதே இது மாதிரி மதுரையிலும் நடைபெறுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஆண்டுதோறும் நடைபெற வேண்டுமென்று விதி இருக்கிறது. 1969-ல் நகராட்சித் தேர்தல் நடைபெற்றது. பிறகு 1971-ல் மாநகராட்சியாக மாற்றப்பட்டது. அப்போது பதவிக்காலம் மூன்று ஆண்டுகளாக இருந்தது. 1972 ஆம் ஆண்டு தேர்தல் நடைபெறும் என்றும் அதுவரை உறுப்பினர்கள் காலமும் மேயர், துணை மேயர் காலமும் நீடிக்கும் என்றும் உத்தரவு போட்டிருந்தோம். பிறகு ஐந்தாண்டு காலமாக நீடிக்கப்பட்டது. ஆகவே, தேர்தல் நடைபெற வேண்டுமென்று அவசரச் சட்டம் கொண்டுவரப்பட்டு அதற்கு இணையாக இந்தத் தீர்மானம் கொண்டுவரப்படுகிறது. இதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்காலிகத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி :

" சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1972 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1972) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் ".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது. சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, நெடுந்தலைப்பு, முகப்புரை ஆகியவை, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே,

" சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1972 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1972) நிறைவேற்றப்பட வேண்டும் ". என்று முன் மொழிகிறேன்.

தற்காலிகத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி :

" சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1972 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1972) நிறைவேற்றப்பட வேண்டும் ".

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, ஆம் என்போரும் இல்லாமலும், இல்லை என்போரும் இல்லாமலே நிறைவேற்றப்படுகிறது.

தற்காலிகத் தலைவர்: சம்பிரதாய முறையில் சொல்லவேண்டியிருக்கிறது.

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(5) தமிழ் நாடு 1972 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 32/1972).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே,

சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 32/1972) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

சென்னை மாநகராட்சிப் பணியாளரமைப்பில் தற்போது ஐந்து வகையான அதிகாரிகள், பணியாளர்கள் உள்ளனர். I-A வகைப் பதவிகளுக்கு தற்போது அரசு நியமனம் செய்கிறது. I-B, II வகைப் பதவிகளுக்கு மாநகராட்சி மன்றம் நியமனம் செய்கின்றது. இந்த நியமனம் அரசின் ஒப்புதலுக்குட்பட்டதாகும். திங்கள் ஒன்றுக்குச் சம்பளம் அல்லது பேரளவுச் சம்பளம் ரூ. 100க்கு மேற்படும், III,IV ஆம் வகைப் பதவிகளுக்கு, மேயர் மன்றத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் உறுப்பினர், கமிஷனர் ஆகியோரைக் கொண்ட நியமனக்குழு ஏற்பளிக்கிற விண்ணப்பதாரர் பட்டியலிலிருந்து கமிஷனர் நியமனம் செய்கின்றார். III, IV-ஆம் வகையின் கீழ் உள்ள ஏனைய பதவிகளுக்கு அதாவது திங்கள் ஒன்றுக்கு சம்பளம் அல்லது பேரளவுச் சம்பளம் ரூ. 100-க்குக் குறைவாக உள்ள பதவிகளுக்கு கமிஷனர் நியமன அதிகாரியாவர்.

இது தொடர்பாக, 1919-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்திற்கு (தமிழ்நாடு சட்டம் எண் 4/1919) விரிவான திருத்தங்கள் செய்வது பற்றிக் கருத்துத் தெரிவிக்கத் தனிப்பட்ட குழு ஒன்றை

@ 251-ம் பக்கத்தில் இணைப்பு VIII ஆக அச்சிடப்பட்டுள்ளது.